IN THE COURT OF THE DISTRICT MUNSIF OF ARAKKONAM

OS. 34/2024

| | |
|---|---|
| Deposition of Witness | : PW 1 |
| Name | : முரளி (வயது – 41) |
| Father's Name /W/o | : த/பெ நடராஜ் |
| Calling | : – |
| Address | : பெருமுச்சி |

Solemnly affirmation accordance with the provision of Act X 1873 on the day of 29.07.2026.

## குறுக்கு விசாரணை

1. இந்த வழக்கை எதற்காக தாக்கல் செய்துள்ளேன் என்றால் உமாபதி எனது வீட்டிடம் வந்து தகராறு செய்தார் எனவே வழக்கு தாக்கல் செய்தேன். உமாபதி மட்டும் தான் தகராறு செய்தாரா அல்லது வேறு யாராவது தகராறு செய்தாரா என்றால் உமாபதி மட்டும் தான் தகராறு செய்தார். அரசன் என்பவர் யார் என்றால் என் பெரியப்பா. பிரதிவாதி உமாபதி எனக்கு என்ன உறவு முறை என்றால் சித்தப்பா. வழக்கு சொத்து அரசன், உமாபதி, நடராஜன் ஆகிய மூவர் பெயரில் கூட்டாக தான் இருந்தது என்றால் இல்லை. வழக்கு சொத்து முதலில் யார் பெயரில் இருந்தது என்றால என் தந்தை பெயரில் இருந்தது. என் தந்தை பெயர் என்னவென்றால் நடராஜன்.

2. என் தந்தைக்கு பிறகு என் பெயருக்கு சொத்து மாற்றம் செய்யப்பட்டதா என்றால் என் தந்தை என் பெயருக்கு செட்டில்மெண்ட் எழுதி வைத்தார். மேற்படி செட்டில்மெண்ட் ஆவணம் வழக்கில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. என் தந்தைக்கு எத்தனை பேர் வாரிசுகள் என்றால் பொன்னம்மாள், ராஜாத்தி மற்றும் நான். வழக்கு சொத்து இருக்கும் போது பாகப்பிரிவினை ஏற்பட்டதா என்றால் இல்லை.

3. வழக்கு சொத்து சம்பந்தமாக என் குடும்பத்திற்கும் உமாபதி மற்றும் அரசன் குடும்பத்திற்கும் பிரச்சினை இருந்ததா என்றால் இல்லை. என் பெயரில் பட்டா வாங்கிய பிறகு வழக்கு தாக்கல் செய்தேனா என்றால் ஆம். என் தந்தை என் பெயருக்கு எழுதி வைத்த செட்டில்மெண்ட் ஆவணத்தில் யார் சாட்சி கையொப்பமிட்டுள்ளார் என்றால் ஞாபகமில்லை. வழக்கு சொத்து கூட்டு குடும்ப சொத்து என்றாலும் தனி நபர் பெயரில் எழுதியிருந்தால் அது செல்லாது என்றால் சரியல்ல. என் பெயரில் வாங்கப்பட்ட பட்டாவிற்கான உத்தரவு கொடுத்தார்களா என்றால் கொடுத்தார்கள். மேற்படி உத்தரவின் நகலை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை.

4. இவ்வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு உமாபதி மற்றும் அரசன் என்பவருக்கு சட்ட அறிவிப்பு அனுப்பினேனா என்றால் இல்லை. வழக்கு சொத்து என்ன நிலம் என்றால் வீட்டு மனை ஆகும். வழக்கு சொத்து யார் பெயரில் உள்ளது என்றால் என் பெயரில் உள்ளது. எப்போதிலிருந்து வழக்கு சொத்து என் பெயரில் இருந்தது என்றால் என் தந்தை எனக்கு செட்டில்மெண்ட் எழுதிய பிறகு என் பெயரில் உள்ளது. பிரதிவாதி பிரச்சினை செய்தது தொடர்பாக நான் அவர் மீது காவல் நிலையத்தில் புகார் அளித்தேனா என்றால இல்லை. வழக்கு சொத்தின் உமாபதி மற்றும் அரசன் என்பவர்கள் உரிமை இல்லை என்றும் எனக்கு மட்டும தான் வழக்கு சொத்தில் உரிமை உள்ளது என்பதை நிரூபிக்க எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல.

5. வழக்கு சொத்து கூட்டு குடும்ப சொத்து என்றாலும் அதனை மறைத்து சொத்தை அபகரிக்கும் நோக்கத்துடன் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எனவே என் பெயரில் எழுதப்பட்ட செட்டில்மெண்ட செல்லாது என்றால் சரியல்ல. வழக்கு சொத்து என் தந்தைக்கு எவ்வாறு வந்தது என்றால் அரசாங்கம் வழங்கியது. பிரதிவாதிக்கு உரிமை உள்ள சொத்தை சட்டவிரோதமாக நான் வாங்கியுள்ளேன் என்றாலும் செட்டில்மெண்ட் ஆவணம் சட்டப்படி செல்லாது என்றால் சரியல்ல.

6. பிரதிவாதி எந்த தேதியில் வீட்டில் வந்து தகராறு செய்தார் என்றால் ஞாபகமில்லை. பிரதிவாதிகள் தகராறு செய்யவில்லை என்றாலும் நான் பொய்யாக ஜோடித்து வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. வா.சா.ஆ – 8 சட்ட விரோதமாக பெறப்பட்டு தாககல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எனவே 3 பேருக்கு வழக்கு சொத்தில் சரிபாகம் உள்ளது என்றாலும் அதனை மறைத்து இந்த வழக்கை தாக்கல் செய்ததால் இவ்வழக்கு தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல.